MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

25-07-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | பிலவ வருடம் (ஆடி 9) | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 58 | இதழ் 26 பக்கம்-12
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர் : பேரருள்பணி ஆ.அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்

## வறியோர், புறக்கணிப்பட்டோர் பிரான்சிஸ்கன் சபையினரின் ஆசிரியர்கள்



Friars Minor எனப்படும் பிரான்சிஸ்கன் துறவு சபையின் பொதுப்பேரவையில் பங்குபெறும் பிரதிநிதிகளுக்கு, தன் நல்வாழ்த்துக்களையும், இறைவேண்டல்களையும் தெரிவித்து, ஜூலை 17, இச்சனிக்கிழமையன்று, செய்தியொன்றை அனுப்பியுள்ளார் நம் திருத்தந்தை பிரான்சிஸ்.

கோவிட்-19 பெருந்தொற்றுச் சூழ-ல் பொதுப்பேரவையை நடத்தும் நீங்கள், நிச்சயமாக இறைவனின் அருளை அனுபவிப்பீர்கள் என்று, தன் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, "உங்கள் கண்ணோட்டத்தைப் புதுப்பியுங்கள், மற்றும் உங்களது வருங்காலத்தைத் தழுவிக்கொள்ளுங்கள்" என்ற தலைப்பில், அப்பொதுப்பேரவை நடைபெறுவது பற்றிய தன் எண்ணங்களைப் பதிவுசெய்துள்ளார்.

"ஒருவரின் கண்ணோட்டத்தைப் புதுப்பித்தல்" என்பதே அசிசி நகர் புனித பிரான்சிஸ் இளைஞராக இருந்தபோது நடந்தது எனவும், கண்ணோட்டத்தைப் புதுப்பித்தல் என்பது, ஏழைகள், மற்றும் புறக்கணிக்கப்பட்டோரை கடவுளின் பிரசன்னத்தின் ஓர் அடையாளமாக, ஏறத்தாழ ஓர் அருளடையாளமாகத் தியானிப்பதி-ருந்து தொடங்கவேண்டும்.

இந்த புதுப்பிக்கப்பட்ட கண்ணோட்டத்தி-ருந்து, அதாவது, நம் அயலாரையும், அவர்களது காயங்களையும் சந்திக்கும் அனுபவத்தி-ருந்து, வருங்காலத்தில், அவர்களை உடன் பிறந்தோராக, மற்றும் பிரான்சிஸ்களாகப் பார்ப்பதற்கு, புதுப்பிக்கப்பட்ட சக்தியைப் பெறுகிறோம். இவ்வாறு, உங்கள் சபையின் அழகான பெயருக்கேற்ப வாழ்வீர்கள் என்றும், பிரான்சிஸ்கன் சபையினரிடம் எடுத்துரைத்த திருத்தந்தை, ஏழைகளும் புறக்கணிக்கப்பட்டோருமே உங்களது ஆசிரியர்கள் என்றும் கூறியுள்ளார்.

உட-லும், ஆன்மாவிலும், துன்புறும் மனிதர்களை, பெரிய சொற்களால், அல்ல மாறாக, சகோதர அன்போடும் தாழ்ச்சியோடும் சந்தித்து, அவர்களை உங்களின் உடன்பிறப்புக்களாக உணரச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றுரைத்துள்ள திருத்தந்தை, காயப்பட்டுள்ள படைப்பை நோக்கிச் செல்லுங்கள் என்றும் கூறியுள்ளார்.

சிலரின் வளமையான வாழ்வுக்காக, பூமிக்கோளத்தின் வளங்கள் கட்டுப்பாடின்றி பயன்படுத்தப்படுவதால், நம் பொது இல்லமாகிய பூமி துயருறுகின்றது. எனவே அதனிடம் செல்லுங்கள் எனவும், ஒரு பொதுவான திட்டத்தைக் கண்டுபிடிக்கத் திணறுகின்ற ஓர் உலகில், உடன்பிறந்த உணர்வு மற்றும், சமூக நட்பு ஆகிய கொடைகளை வழங்குகின்ற மனிதர்களாக, சுவர்களை அல்ல, பாலங்களைக் கட்டியெழுப்பும் வழிகளைத் தேடும் உரையாடல் மனிதர்களாகச் செல்லுங்கள் எனவும், திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார்.

பகைமை, பிரிவினை, வன்முறை ஆகியவற்றை விதைக்கும் மனிதர்களை மனமாற்றத்திற்கு அழைத்து, உண்மை, நீதி, மன்னிப்பு ஆகியவற்றினின்று பிறக்கும் நம்பிக்கையை வழங்கி, அமைதி மற்றும் ஒப்புரவின் மனிதர்களாகச் செல்லுங்கள், இந்தச் சந்திப்புகளி-ருந்து, நீங்கள் நற்செய்தியை முழுமையாய் வாழ்வீர்கள், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் புனித நற்செய்தியைக் கடைப்பிடியுங்கள், இதுவே பிரான்சிஸ்கன் சபையினரின் வாழ்வும், கொள்கையும் ஆகும்.

உங்கள் மனங்களையும் இதயங்களையும் தூய ஆவியாருக்குத் திறந்து வைப்பதற்குத் தடையாய் இருக்கும் அச்சம் மற்றும், கவலைக்கு இடம் கொடுக்காதீர்கள், நற்செய்தியின் நம்பகமான மற்றும், மகிழ்ச்சியான சான்றுகளாக வாழுங்கள், உலகத்தின் பாதைகளில் நம்பிக்கை, மற்றும் எதிர்நோக்கோடு நற்செய்தியின் விதைகளைத் தூவுங்கள் என்று கூறிய திருத்தந்தை, தனக்காகச் செபிக்குமாறும் பிரான்சிஸ்கன் சபையினரிடம் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் பேனா...

# எல்லோரும் இன்புற்றிருக்க

ஒவ்வொருவரும் தான் இன்புற்றிருக்க வேண்டும் என ஆசித்து அதற்காக பாடுபடுகின்றனர். உடல் நலனைப் பேணுவதும், உடல் சார்ந்த வசதிகளை அடைவதும், உடல் சார்ந்த இன்பங்களை துய்ப்பதும், இவை மட்டுமே இன்பம் என்று நம்மில் பலர் பெரும்பாலான நேரங்களில் தவறாகப் புரிந்து வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட தவறான புரித-ன் விளக்கமாக 'எல்லாம் இந்த ஒரு ஜான் வயிற்றுக்காகத் தான்' என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இது உடலே (வயிறே) முக்கியம் என்பவரின் கூற்று. உடலைவிட வேறொன்று முக்கியமானது, மேலானது. அதை பெற்றுக்கொள்வதே உண்மையான இன்பம். அதுதான் ஆன்மா.

"... எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலைகொள்ளாதீர்கள். ஏனெனில்....உங்களுக்கு இவை யாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் (மத். 6:31-33). இதனையே 18ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த தாயுமானவர் வ-யுறுத்துகிறார். தாயுமானவர் இல்லறத்தில் இருந்து, பின் துறவை மேற்கொண்டவர். தன் அனுபவத்தை பின்வருமாறு வார்த்தைகளில் வடிக்கின்றார்." பொய்யுலகும், பொய்யுறவும், பொய்யுடலும் பொய்யெனவே மெய்யநினை, மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ - காண் (காண்பேனோ கண்ணி-6)

மெய்மையை உணர்ந்து, மெய்மையிலே திளைத்து மெய்மையிலேயே நிலைப்பதே உண்மையான இன்பம் என்பதை நம் ஆன்மீகவாதிகள் அறிவுறுத்திச் சென்றிருக்கின்றனர். உள்ளம் பெரும் கோயில், ஊன் உடம்பு ஆலயம், வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல் (திருமந்திரம் - ஏழாம் தந்திரம் 11.சிவபூசை) "நீங்கள் கடவுளுடைய கோயிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா?" (1கொரி.3:16). "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (விப.3:4) என்று தன்னை வெளிப்படுத்திய கடவுளை (மெய்மையை) கண்டுகொண்டு தங்களை அவருக்கே பணிய வைத்துக் கொண்டவர்கள் தாங்களும் மற்றவர்களும் மகிழ்ந்திருக்கும் பாதையில் பயணிக்கின்றனர். இவர்கள் எல்லாரையும், எல்லா உயிர்களையும் நேசித்து இன்புறுவர். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் இறைவா' என்று வள்ளலார் அடிகளாரும், பூச்சி, பறவை, விலங்கினங்களை சகோதர, சகோதரியே என்று சொல்-பாசங்காட்டிப் பழகிய புனித பிரான்சிசும், எல்லோரும் இன்புற்று இருக்க அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே (பராபரக் கண்ணி - 221) என்று தாயுமானவரும் விரும்பி வாழ்ந்ததும், கடவுளை (மெய்மையை) உள்ளத்திலே உணர்ந்து உணர்விலே கலந்து அனுபவித்தனர்.

தன் நிலைக்கும், அழைத்தலுக்கும் ஏற்ற செயலை செய்தலே எல்லோரும் இன்புற்றிருக்க வழி. பரம சிவன் கழுத்தில் இருக்கும் பாம்பு கேட்டது, கருடா நலமா? கருடன் சொன்னது, யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் நலமே. சிவன் கழுத்தில் இல்லாமல் தரையில் இருந்தால் பாம்புக்கு ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நம் நிலையையும், அழைத்தலையும் மறந்து இடம்மாறி நின்றால் இன்பத்திற்குப் பதில் துன்பமே மிகும். பெற்றோர் பிள்ளைகள், கற்பவர் கற்பிப்பவர், இல்லறத்தார் துறவறத்தார் அவரவர் நிலை (கடமை)யையும், அழைத்தல் (பொறுப்)பையும் உணர்ந்து வாழ்தலே இன்பமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும். பெற்றோர் ஆசிரியரின் நிலை (கடமை) பிள்ளைகளை உட-லும் அறிவிலும் வளர தங்களை கரைத்துக் கொள்வது, அவர்களுடைய அழைத்தல் (பொறுப்பு) பிள்ளைகளை பண்புள்ளோராக தங்களை மாதிரியாக வைப்பது. இல்லறத்தாரின் அழைத்தல் தர்மம் செழிக்கச் செய்வது, துறவறத்தாரின் அழைத்தல் மனத்தூய்மையிலே கடவுளைப் பார்க்க மக்களின் மனச்சாட்சியை கூர்மைபடுத்துவது. இல்லறத்தார் நேரிய வழியில் பொருளீட்டி மக்களைக் காப்பதும், துறவறத்தார். அருளீட்டி மக்களை வழிநடத்துவதும் அவரவர் அழைத்த-ன் தர்மம். "நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கு ஏற்ப வாழுங்கள்" (எபே.4:1).

ஒவ்வொருவரும் தம் குற்றம் ஏற்றுக்கொள்வதும், பிறர் நலம் நாடுவதும் எல்லோரும் இன்புற்றிருக்கச் செய்யும். ஆடு மேய்ப்பவனாக இருந்த சிறுவன் தாவீதை கடவுள் அரசனாக இருக்கச் செய்தார். கடவுளையே நம்பி, அவர் வழிநடத்த-ல் ஆட்சி செய்து வந்த தாவீதின் அரசிலே அமைதி இருந்தது, மக்கள் மகிழ்ந்திருந்தனர். தாவீது தன் வெற்றிக்குக் காரணம் தன் வ-மையே என்று கருதினான். தன் ஆட்சியின் கீழிருக்கும் மக்கள் தொகையை கணக்கெடுக்க கட்டளையிட்டான். துன்பம் அவனையும் அவன் நாட்டையும் சூழ்ந்தது. "நான் உன்மீது மூன்று தண்டனைகளைக் குறிப்பிடுகிறேன். நீ ஒன்றை தேர்ந்தெடு" (2சாமு.24:12) என்று கடவுள் எச்சரிக்கிறார். அந்த தண்டனை 1) ஏழு ஆண்டு பஞ்சம்; 2) எதிரிகள் துரத்த மூன்று மாதங்கள் தப்பியோடுதல் 3) நாட்டில் மூன்று நாள் கொள்ளை நோய். தாவீது கடவுளின் இரக்கத்தில் நம்பிக்கை வைத்து நாட்டின்மீது மூன்று நாள் கொள்ளை நோயை தேர்ந்து கொள்கிறார். கொள்ளை நோயின் தாக்கத்தை உணர்ந்த தாவீது தன் குற்றத்தை ஏற்று மனம் வருந்தி இறைவனிடம் "பாவம் செய்தவன் நானல்லவோ! தீச்செயல் புரிந்தவன் நானல்லவோ! இம்மந்தை எக்குற்றம் செய்தது? இப்போது உம் கை, என்னையும் என் தந்தையின் வீட்டாரையும் வதைப்பதாக" (2சாமு.24:17) என்றான். கடவுள் இரக்கம் காட்டி கொள்ளை நோயை தடுத்து விட்டார். இப்படி நம் தலைவர்கள் தம் குற்றம் ஏற்று மக்கள் நலம் நாடினால் இன்பம் கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் காய்தல் உவத்தல் இன்றி மக்களுக்கு நீதி வழங்கும் ஞானத்தைக் கொண்டிருந்தால் மக்கள் இன்புற்றிருக்க முடியும். சாலமோன் அரசனிடம் "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்" என்று கடவுள் சொல்ல (1அர 3:5) "உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்" (1அர.3:9) என்று வரம் கேட்கிறார். இப்படி நன்மை தீமை பகுத்தாய்ந்து நீதி வழங்கும் ஞானத்தை ஆட்சியாளர்களும், நீதி அரசர்களும் நாடி நின்றால் உலகில் இன்பம் செழிக்கும்.

உள்ளிருக்கும் மெய்மையை (கடவுளை) உணர்ந்து ஒவ்வொருவரும் அவரவர் நிலையில் அழைத்தலுக்கேற்ப வாழ்ந்து, தன் குற்றம் ஏற்றுக்கொண்டு, நீதியோடு ஒழுகும் ஞானத்தை நாடி நின்றால் எல்லோரும் இன்புற்றிருக்க வழி பிறக்கும். முயல்வோமா?



# புலம்பலும்... இறைபராமரிப்பும்



அருள்திரு. S. ஜான்சன்
உதவி பங்குத்தந்தை, முகையூர்.

I விப. 16:2-4,12-15 எபே.4:17,20-24 யோவா. 6:24-35 01-08-2021

இறையேசுவில் பிரியமானவர்களே!

வளமாக வாழும்போது, பட்ட துன்பங்கள் மறந்து போகின்றன, துன்பத்தில் உழலும்போது, துய்த்த நன்மைகள் மறந்து போகின்றன. (சீராக்.11.25) நம் வாழ்வில் அனைத்தும் சரியாக இயங்கும்போது நாம் எதைப்பற்றியும் கவலை கொள்வதில்லை. ஆனால், தடைகளையும், போராட்டங்களையும் சந்திக்கும்போது பெற்ற நன்மைகளை நினைவில் இருத்தாமல், இறைபராமரிப்பில் நம்பிக்கை இல்லாத நிலையை கடவுளின் உதவியோடு கடக்க இப்பொதுக்காலம் 18-ஆம் ஞாயிறு வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன.

**என்னோடு நம்பிக்கையின்மை:**

இன்றைய முதல் வாசகத்தில், இஸ்ரயேல் மக்கள் செங்கடலை கடந்ததற்கு பிறகு நிகழ்ந்ததை வாசிக்கின்றோம். பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தி, தனது வ-மைமிகு கரங்களால் தனது மக்களை விடுவித்து, கடந்த காலத்தில் காத்து வந்த கடவுளுக்கும், அவரின் அடியார்களுக்கும் எதிராக இஸ்ரயேல் மக்கள் முறுமுறுக்கின்றனர் : "இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து எகிப்து நாட்டில்... இருப்பதும், இறப்பதும் நலம்...எங்களை மாண்டு போகவா அழைத்து வந்தீர்" (16:3).

430 ஆண்டுகளாய் அடிமைகளாக, அகதிகளாக இருந்த இவர்களின் வாழ்வு அப்படியே பழகிப்போய்விட்டது, விடுதலை வாழ்வு சற்று கசக்கிறது. ஒற்றை வரியில் சொல்ல வேண்டும் என்றால், குடிக்கு (மதுவிற்கு) அடிமையாகி, வாழ்வினை இழந்து, மறுவாழ்வு மையத்தின் மூலமாக மீண்டு, மீண்டும் மதுவே நல்லது, மகிழ்வை தரக்கூடியது என்று சொல்லும் மதுப்பிரியர்களுக்கு ஒப்பானதாக இருக்கிறது, இஸ்ரயேல் மக்களின் இந்த தொடர் முறுமுறுப்பு. ஏனெனில், செங்கடலை கடந்த உடனேயே, தங்களை தொடர்ந்து வந்த பாரவோனின் படைகளைப் பார்த்து, இறைபராமரிப்பை உணராதவர்களாய், எகிப்தில் சவக்குழிகள் இல்லையென்றா நீர் எங்களைப் பாலைநிலத்தில் சாவதற்கு இழுத்து வந்தீர்?" என ஆண்டவரை நோக்கிக் கேட்டனர். இப்பொழுதும் கேட்கின்றனர், முறுமுறுகின்றனர். இந்நாள் வரை நம்மை காத்த இறைவன், இனிவரும் காலங்களிலும் காப்பார் என்ற இறை பராமரிப்பின் மீதுள்ள, அவர்களின் நம்பிக்கை, பசி, பயம், தூக்கம் என்ற உணர்வுகளால், மங்கி போகின்றது. ஆனால் மக்கள் நம்பிக்கை யற்றவர்களாய், குறைபாடு உள்ளவர்களாக இருந்தாலும் நம் கடவுள் எப்பொழுதும் நம்பிக்கைக்கு உரியவராக தொடர்ந்து இருக்கின்றார். ஆகையால், அவர்களுக்கு மீண்டும் அற்புதமாக உணவினை பாலை நிலத்தில் வழங்குகிறார்.

**எபேசு நகர மக்களும், இறை பராமரிப்பும்:**

இரண்டாம் வாசகம் எபேசியருக்கு எழுதப்பட்ட திருமட--ருந்து கொடுக்கப்பட்டுள்ளது. எபேசு நகர இறைமக்கள், தங்கள் முந்தின நடத்தையான, சிலை வழிபாட்டிலும், பிளவுபட்ட அறநெறி வாழ்விலும் வாழ்ந்தவர்கள். அத்தகைய வாழ்வி--ருந்து, அடிமைத் தனத்தி-ருந்து, கிறிஸ்துவின் நற்செய்தியால், விடுதலை வாழ்வு வாழ அழைப்பட்டவர்களே எபேசு நகர இறைமக்கள் - ஆகவே தான், பவுலடிகளார் உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும் (எபே 4:22) என்ற அழைப்பை விடுக்கின்றார். முதல் வாசகத்தில் நாம் கேட்டது போல, இவர்களும் தங்கள் பழைய, சிறைப்பட்ட வாழ்விற்கு பின்நோக்கி செல்கிறார்கள். ஆனால், இறைபராமரிப்பு, புனித பவுலடிகளாரின் வழியாய், அவர்களை மீண்டும் புதிய, புதுப்பிக்கப்பட்ட மனபாங்கிற்கு அழைத்துச் செல்கிறது. உணவின் மூலம் தனது பராமரிப்பை தொடரும் நம் கடவுள், இங்கு மனிதரின் வழியாக தன் மக்களை புதுப்பிக்கின்றார்.

**அருளடையாளத்தின் வழியாய்:**

உணவினால் தங்கள் வயிறுகளை நிறைத்துக்கொண்டு, எதற்காக அருளடையாளம் (புதுமை) நிறைவேற்றப்பட்டதோ இதை சற்றும் உணராமல், மீண்டும் நாங்கள் உம்மை இறைமகன் என ஏற்றுக்கொள்ள நீர் என்ன அடையாளம் காட்டுகின்றீர்? என, தங்கள் மூதாதையர்களைப் போல, இயேசுவிடம் கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுப்படுகின்றது. ஆண்டவர் நம்பிக்கைக்கு உரியவர், ஒருபோதும் நம்மை கைநெகிழமாட்டார். நம் இருத்தல், இயக்கம் என அனைத்திலும் இறைவனின் கரம் செயல்பட்டாலும், அவர் நம்மிடம் இருக்கிறாரா? என்பதை நாமும் அடையாளங்களை வைத்தே சோதித்து அறிகின்றோம். சீராக்கின் ஞான நூல் கூறுவது போல, துன்பங்கள் வருகின்ற வேளைகளில், துய்த்த நன்மைகளை மறந்து விடுகின்றோம். செங்கடல் போன்று பிரச்சினைகள் நம் முன்னே நிற்கும் போதும், கடவுள் இருக்கின்றாரா? என்ற சந்தேகம் நம் வாழ்வில் எழும்போதும், சோதனை காலங்களில் இறை பராமரிப்பும், உடனிருப்பும் இருக்கின்றதா என அஞ்சும் போதும், இயேசுவின் வார்த்தைகள் நமக்கு மீண்டும் அவரின் பராமரிப்பை உறுதிப்படுத்துகின்றன. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது, என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.

**செயல்பாடு:**

அவசர புத்தி, உடனடி விமர்சனம், உடனடி முடிவு அனைத்தும் இறைபராமரிப்பிற்கு நம்மை கையளிக்க விடாமல் நம்மை மூடி வைத்திருக்கும் சிறைக் கதவுகளே.

**தியானிப்போம்:**

1) 2திமோ.2:13 - நாம் நம்பத்தகாதவரெனினும் அவர் நம்பத் தகுந்தவர்.

2) 2தெச 3:3 - ஆண்டவர் நம்பிக்கைக்கு உரியவர். அவர் உங்களை உறுதிப்படுத்தி, தீயோனிடமிருந்து காத்தருள்வார்.

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு:**

சர்வவியாபி சந்தா புதுப்பிப்போர் உங்கள் **சந்தா எண்ணை** தவறாமல் எழுதி அனுப்பவும். 2021-22 சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.

- ***ஆசிரியர்.***



# அர்ப்பண நேயம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

மனித நேயமும் கிறிஸ்தவ நேயமும் கடவுளின் பிள்ளைகளின் தன்னுரு என்பதை சரியாக, முழுமையாக, இறைவனுடைய சாயல், இயேசுவின் உருவம் என்று தூய ஆவியில் துய்த்து உணர்வோம். கடவுள் தனக்காக இருப்பதில்லை, அப்படியே அவருடைய பிள்ளைகளும் தங்களுக்காக இருக்க வாய்ப்பும் இல்லை, அழைப்பும் இல்லை. நாம் இருப்பதே இல்லறம் துறவறம் நல்லறம் வழியாக நமது வாழ்வை பொருள்மிகுந்ததாக பொருத்தமிக்கதாக அமைத்துக் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

**சுயநலச் சோதனை :** ஒருவர் இறந்து மூன்று மணிநேரம் கடந்துதான் ஒருவருடைய சுயநலம் இறக்கின்றது என்று கூறுவதை ஆழமாக உணர்ந்து பார்த்து சுயநலச் சோதனையை வெல்வோம். இதற்காகவே இயேசுவின் மூன்று சோதனைகள் நற்செய்தியில் பதிவாகி உள்ளது. மூன்று முக்கியமான சோதனைகள், உலகம் தரும் உணவு, உலகின் சொத்து, சுயநலதற்பெருமை இவைகளை வென்று வாழ இயேசு நமக்கு வழி வகுத்துள்ளார்.

இன்றைய உலகின் சோதனை அனைவருக்கும் உண்டு. இவைகளை மேற்கொள்ள கடவுள் சிறப்பாக அழைக்கப்பட்டவர்களை மூவித வார்த்தைப்பாடுகள், கற்பு, பணிவு, ஏழ்மை வழி எடுத்துக்காட்டுகளாக விளங்க அழைக்கின்றார். வே-யே பயிரை மேய்வதுபோல அர்ப்பணிக்கப்பட்டோரும் சோதனைக்கு ஆளாகி வருவதை அன்றாடம் காண்கிறோம். அதிலும் தனியாக ஒன்றுமில்லை என்ற மூடுபோர்வையில் குழுவாக வைத்திருப்பதை அனைவரும் அறிவர். இருந்தும், இல்லாமல் இருப்பதே இன்பம். பற்றற்ற வாழ்வு பரமனின் வாழ்வாகும்.

**அர்ப்பண உணர்வு:** நிர்வாணமாய் பிறக்கின்றோம், நிர்வாணமாய்தான் இறப்போம் என்பதை எல்லாரும் பார்க்கின்றனர், ஆனால் பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியவில்லை. வழக்குகள், போராட்டங்கள், கொலை, கடத்தல், ஏமாற்றுதல், திருடுதல் எல்லாம் கவலைக்குரியதாகும். கடவுள் தனது பிள்ளைகளைப் பராமரிக்க மேற்கொள்ளும் திட்டத்தை நாம் உணர்ந்தால் நன்று. தமிழ் மரபில் "பகிர்ந்துண்டு பல்லுயிர் ஓம்புக, யாதும் ஊரே, யாவரும் கேளீர்" என்ற பாடங்களை நாம் கடைபிடித்தால் சுவர்க்கத்தை இவ்வுலகில் சுவைக்க முடியும். மனந்திரும்புங்கள் இறையரசு நெருங்கிவிட்டது என்று இயேசுவும் அழைத்து வருகின்றார். பற்றற்ற வாழ்வே ஒரு சீடனுக்கு இன்றியமையாத நிபந்தனையாகும், கடமையும் ஆகும்.

அர்ப்பணிக்கப்பட்டவர்களில் புனித அன்னை தெரேசா அவர்கள் மற்றும் அச்சபையின் சகோதரிகள் எடுத்துக்காட்டாய் இருப்பது, இன்னும் ஒரு சில சபைகள் இருப்பது பெருமைக்குரியதாகும். இயேசுவைப் போல ஏழைகளோடு, ஏழைகளைப் போல அகமும் புறமும் இருப்பது மேலானது. சபைகளுக்குப் பொறுப்பாய் இருக்கின்றவர்கள் சபதம் எடுத்து சாதிக்க வேண்டியது காலத்தின், அழைப்பின், அர்ப்பணத்தின் கட்டாயம்.

**வழி, வாழ்வு, வாய்மை :** இயேசு நானே வழியும் வாழ்வும் வாய்மையுமாய் இருக்கிறேன் என்று கடவுளின் திருவுளத் திட்டத்தை நமக்குத் தெரிவித்துள்ளார், வாழ்ந்து காட்டி இருக்கின்றார். திருச்சபை விழித்தெழுந்து என்றும் சான்றுபகர பொறுப்பையும் கடமையும் பெற்றிருக்கின்றது என்பதை மறவோம். நமது வாழ்வு முழுவதும் இயேசு என்ற அடித்தளத்தில் கட்டப்பட்டதென்றால் எந்தச் சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டாம். வாய்மை என்ற மூலைக்கல் நமக்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்பதை வாழ்ந்து காட்டுவோரோடு நாமும் இணைந்து சான்று பகர்வோம்.

இன்று போதனையை விட வாழும் எடுத்துக் காட்டுகளைத்தான் இன்றைய உலகம், இளையோர் தேடுகின்றனர். நம்மில் எத்தனைப் பேர் சவால் நிறைந்த வாழ்வை மேற்கொண்டு வருகிறோம். இந்தியாவில் இருக்கும் ஆயர்கள், குருக்கள் துறவிகள் எடுத்துக்காட்டாக வாழ முன்வந்தால், இந்தியத் திருச்சபை இந்தியாவில் எல்லாருக்கும், சிறப்பாக கிறிஸ்தவர்கட்கும் எடுத்துக்காட்டாய் திகழும். முயன்றால் முடியாதது உண்டோ? முன் வருவோம்! முயல்வோம்! இயேசு நம்மோடு இருந்து புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப கைகொடுக்கின்றார். வாழ்க, வெல்க.

---

**விண்ணக வாழ்வின்**
**21-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம் : 01-09-1933



மறைவு : 29-07-2000

**திரு. S.அருமைநாதன் Rtd. H.M.**

"மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர் பெற்று எழுகிறது" - 1கொரி.15.44)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 29-07-2021 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு அணிலாடி தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில், புதுவை நெல்-த்தோப்பு விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும் திருப்ப- நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்

மனைவி: பிலோமினாள்

**மகள், மருமகன், மகன்கள், மருமகள்கள்,**

**Sr.இம்மாகுலேட், மற்றும் பேரப்பிள்ளைகள்.**

அணிலாடி.

# கொரோனா பெருந்தொற்றும் - ஊடக வலையொளி சமய பகிர்வுகளும்

சென்ற இதழ் தொடர்ச்சி

– அருள்பணி. **அந்தோணிராஜ்,**CRS - சென்னை

ஒவ்வொரு வலையொளி கணக்காளரும், இச்சமூக ஊடகங்களை பயன்படுத்தும் போது, போதுமான நிலையான கவனமும், அக்கறையும், பொறுப்புக் கூறலும் கொண்டிருப்பது அவசியமாகிறது.

இதன் பின்னணியில் திருஅவை சார்பாக (அ) பெயரால் பகிரப்படும், ஒளிப்பரப்பப்படும் பக்தி, நம்பிக்கை சார்ந்த விஷயங்களை புரட்டிப்பார்ப்பது நன்றாக இருக்கும். பக்திப்பாடல்கள், திருப்ப-கள், விவி–யம், திருமறைச் சார்ந்த பகிர்வுகள் ஏராளமாக பதிவேற்றப்படுகின்றன. பெருந்தொற்று காலத்திற்கு முன் இத்தகைய பதிவேற்றங்கள் பரவலாக காணப்பட்டாலும் வைரலாக காணப்பட்டதில்லை, (அ) வைரலாக காணப்பட்டிருப்பினும் பரவலாக காணப்படவில்லை. கொரோனா பெருந்தொற்றின் காரணமாகவும், சமூக இடைவெளி, தனித்திருத்தல், தூய்மையாக இருத்தல், பத்திரமாக இருத்தல் எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் தல திருஅவையும் திருவருட்சாதன கொண்டாட்டங்களையும், பக்திச் செயல்களையும் ஊக்கப்படுத்தும் விதத்தில் அனுமதிகளை வழங்கியது. இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவுச் செய்திட சமூக ஊடகங்கள் துணையாயிருக்கும் என்பதனால் அதன் பயன்பாட்டினை அதிகமாக பரிந்துரைத்தது. அநேக இடங்களில் சமூக ஊடகங்களின் பாவித்தல் தன்மை பெருகி காணப்பட்டாலும், இவற்றின் பயன்பாட்டிற்கான முதன்மை நோக்கம் வர்த்தக, விளம்பர, ஆடம்பர ரீதியாக காணப்படுவது வருத்தத்திற்குரிய ஒன்றாக காணப்படுகின்றது.

அருகிலுள்ள பங்குத் தளத்தில் வலையொளிகளை பதிவேற்றுகிறார்கள், ஏன் நம் பங்கில் இல்லை? என வினாக்களை தொடுப்போர், அப்பதிவேற்றங்கள் எவ்வகையில் நம்பிக்கையை இறை நம்பிக்கையாளர் களிடையே வளர்க்கின்றன, நிலைப்படுத்துகின்றன என்று கேள்வி எழுப்பத் தவறிவிடுகிறார்கள். திருவருட்சாதன கொண்டாட்ட பதிவேற்றங்கள் மறைவழியில் நம்பிக்கை யாளர்களை திடப்படுத்துவது என்பது பல நிலைகளில் நியாயப்படுத்தப்பட்டாலும் பல வலையொளி பதிவேற்றங்கள் வெறும் விளம்பர பதிவேற்றங்களாகவே காணப்படுவது திருஅவையின் அவலநிலையாகவே காணப்படுகின்றது. பெயர், புகழ், இவற்றின் அடிப்படை நோக்கத்தில் வெளியிடப்படும் (அ) பதிவேற்றப்படும் வலையொளி காட்சிகளால் மந்தைகள் சிதறடிக்கப்படுவது கவலையளிக்கின்றது. திருப்ப- கருத்துக்களுக்காகவே திருவருட்சாதன கொண்டாட்டங்கள் பதிவேற்றம் செய்யப்படுவது திருவருட்சாதன கொண்டாட்டங்களின் மாண்பை சீர்குலைப்பதாகவே கருதமுடியும். புற்றீசல்கள் போல் பெருகும் வலையொளி காட்சிகள், பதிவேற்றங்கள் நம்பிக்கையாளர்களை ஒன்றுச் சேர்க்கிறது என்பதைவிட, போட்டி மனப்பான்மையில் அவர்களை பிரித்தாளுகிறது எனவும் கூறமுடிகிறது.

Like,Subscribe,share எனும் இம்மூன்று பிரதான (முக்கியமான) அம்சங்களை கணக்கிடும் பதிவேற்றங்களாக காணப்படுகின்றது. பல நேரங்களில் தனிநபர் திறன்களை விளம்பரப்படுத்தும் பதிவேற்றங்களாகவும் காணப்படுகிறது. இவைகளை பதிவேற்றம் செய்ய, ஒளிப்பரப்ப நன்கொடைகள் வசூ-க்கப்படுவதும், பார்வையாளர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பிரபலமாக துடிப்பதும், பணம் ஈட்டுவதும் வலையொளி மற்றும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டு அனுமதியை மட்டுப்படுத்த அழைத்துச் செல்லும் காரணிகளாகவே காணமுடிகிறது. கொரோனா முதல் அலை பொது முடக்கம், இரண்டாம் அலை பொது முடக்கம் இவற்றிற்கு இடைப்பட்ட காலத்திலும், ஏன் இரண்டாம் பொது முடக்கத்தின் தளர்வுகள் அறிவிக்கப்பட்டப் பின்னும், சமயம் சார்ந்த பொது நிகழ்வுகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டப்பின்னும், வலையொளிகளின் பதிவேற்றம் சற்றும் குறையாமல், அதிகரித்துக் கொண்டிருப்பது, பதிவேற்றங்களின் நோக்கங்களை கேள்விக் குறியாக்குகின்றது. இத்தகைய வலையொளி காணொளிகளை எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம் என்பதனாலும், பல வீட்டு வேலைகளை செய்துக் கொண்டும் பார்க்கலாம் என்பதாலும், நோக்கங்களை பூர்த்திச் செய்யாத சமூக ஊடக பதிவேற்றமாக ஒளிர்கின்றது. இத்தகைய பின்னடைவுகளை கொண்ட பதிவேற்றங்களால் இறைநம்பிக்கையை எவ்வாறு திடப்படுத்த முடியும்? நம்பிக்கையாளரின் ஆன்ம பசி எவ்வாறு நிறைவுக் காணும்? இறை வார்த்தையை வாசிப்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும் ஒருமனதோராய் இணைந்திருந்த திருத்தூதர்கள் போல், நம்பிக்கையாளர்கள் தங்கள் இல்லங்களில் வலையொளி, தொலைக்காட்சி காணொளிகள் மூலம் திருவருட்சாதன கொண்டாங்களில் பங்கேற்கும்போது விவி–யத்தை எடுத்து வாசிப்பது மற்றும் குடும்பத்தினரோடு இணைந்து பங்கேற்பது அல்லது குறைந்த பட்சம் குடும்ப உறவுகளோடு ஒன்றிப்பில் நிலைத்திருப்பதன் வழியாகவே, நம்பிக்கையை ஆழப்படுத்த முடியும். வலையொளி கணக்காளர்களும் தங்களின் பதிவேற்றங்களின் அடிப்படை நோக்கத்தை குறிக்கோளை மறைக் கற்றல், செபித்தல் சார்ந்ததாக கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு இணைந்து செபிப்பதன் வழியாகவே இறைவனின் திருவுளத்தை நம்மால் உணர முடிகிறது, இறைவன் திருவுளத்தை பின்பற்ற முடியும்.


**மிஷன் அச்சக வெளியீடுகள்**

**புதிய புத்தகங்கள் தற்போது விற்பனையில் உள்ளன**



**இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு**

**எடுத்து வாசி பாகம் - I, II**

ஆசிரியர் : Bro. K.பெர்னார்டு, SFO

விலை: 150.00



# வசந்தமாய் வாழ்வு

–அருள்பணி. **M. ஜான் கென்னடி,** துணை முதல்வர்,
தூய வளனார் மேல்நிலைப்பள்ளி, திருப்பாப்புலியூர், கடலூர்.

## 42. கடவுள் இருக்கின்றாரா?

'கடவுள் இருக்கின்றாரா?' என்பது பலராலும் அடிக்கடி கேட்கப்படும் கேள்வி. நாத்திகர்கள், 'இறைவன் இல்லை, இருக்கிறான் என்றால் எங்கே இருக்கிறான்?' என்று கேட்கின்றனர். இறைவனை நம்பும் ஆத்திகர்களாலும் இறைவனை அறிய முடிவதில்லை. இருதரப்பினருமே இறைவனை அறிய முற்படுகிறார்கள். இறைவனை அறிய முடியாது, உணரத்தான் முடியும். அறிவுக்கு எட்டாதது எதுவோ அதுவே இறைமை. இறைவனைப் பற்றிய ஆழமான தத்துவ விளக்கமொன்றை நம்மாழ்வார் கூறுகிறார்.

*ஆணல்லன் பெண்ணல்லன் அல்ல அலியுமல்லன்*

*காணலும் ஆகான் உளனல்லன் இல்லைல்லன்*

*பேணுங்காற் பேணும் உருவாகும் அல்லனுமாம்*

*கோணை பெரிதுடைத்து எம்மானைக் கூறுதலே*

'நாம் வணங்கும் இறைவன் ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலியும் இல்லை. உருவம் இல்லாத அவனைக் கண்களால் காண இயலாது. நம்பாதவர்க்கு அவன் இருப்பவன் இல்லை. நம்பியவருக்கு அவன் இல்லாமல் இல்லை. விரும்பியவருக்கு, விரும்பும் வடிவில் காட்சி தருவான். ஈடுபாடற்றவர்க்கு, இல்லாதவனைப் போல் மறைந்து நிற்பான். ஆண்டவனை அனுபவிக்கும் பேரின்பம் பேச்சில் அடங்காதது' என்கிறார் அவர்.

*உலகெலாம் உணர்ந்து*

*ஓதற்கு அரியவன்*

என்று சேக்கிழார் பெரிய புராணத்தின் கடவுள் வாழ்த்துப் பாடலின் முதல் அடி கூறுகிறது. இங்கே உலகம் என்பது அறிஞர்களைக் குறிக்கும். அவர்கள்கூட இறைவனை உள்ளவாறு அறிந்து, பிறருக்கு எடுத்துச் சொல்ல முடியாது. மனிதனுக்கு மனிதன் அறிவு வேறுபடுகிறது. எனவே இறைவனைப் பற்றிய புரிதலிலும் வேறுபாடு உள்ளது. மனிதன் ஒரு படைப்பே, பரம்பொருளின் ஒரு பகுதி. பகுதி முழுமையை அறிய முடியாது (Part cannot understand the whole). அறிவு படைப்புகளை மட்டுமே புரிந்துகொள்ளும், படைத்தவனை அல்ல. மனிதன் அறிய அறிய தன் அறியாமையை உணர்கிறான். பரம்பொருளை அறிய முடியாது என அறிவதே அறிவு.

இறைவனை அறிய வேண்டும் என்ற அவா மனிதர்களிடம் இயல்பாகவே இருக்கிறது. இதுவே இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதற்குச் சான்று. தேடக்கூடிய ஒரு பொருளாக இறைவன் இல்லை. அவன் தேடுபவரிலேயே இருக்கிறான். அவனை உணர்ந்து, உணர்ந்ததை வார்த்தைகளில் வெளிப்படுத்தவும் முடியாது. எனவே வெளிப்படுத்துதல் அனைத்தும் குறைவுள்ளதாகவே இருக்கும். இறைவனை நாம் உணர்கிறோம் என்பதைவிட, நமக்குள்ளிருந்து இறைவனே தன்னைத் தானே உணர்கிறான் என்பதுதான் உண்மை.

எல்லா பொருட்களுக்கும் மூலமாக – ஆதாரமாக அமைந்து, எங்கும் நிறைந்து, எல்லாம் கடந்து, உட்பொருளாக இருப்பவனே 'கடவுள்'. படைப்பு, காலம், இடம் எல்லாம் கடந்து நிற்பதே பரம்பொருள். படைப்பு அனைத்துமே படைத்தவனை பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு படைப்பும் பரம்பொருள் என்ற முழுமையின் ஒரு பகுதி. எனவேதான், *'ஒவ்வொரு படைப்பிலும் என் அத்தாட்சி இருக்கிறது'* என்று குர் ஆனில் இறைவன் கூறுகிறான். இறைவன் எங்கும் நிறைந்தவன். தாயுமானவர் ஞானிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, *'கண்ட இடம் எல்லாம் கடவுள் மயம் என்றறிந்து கொண்ட நெஞ்சர்'* என்கிறார்.

சூ∴பி கதை ஒன்று. கடலில் இருக்கின்ற மீன் ஒன்று, யாரோ கடலைப் பற்றி பேசுவதை ஒருநாள் கேட்டது. அதுமுதல் கடலைக் காண வேண்டும் என்ற ஆவல் அதற்குத் தோன்றியது. பெரிய மீன், சிறிய மீன், வயதான மீன் என்று பலரிடமும் கடலைப் பற்றி விசாரித்தது. யாருக்கும் கடலைப் பற்றித் தெரியவில்லை. அவைகள் எல்லாம் கடலைப் பற்றிக் கேட்டிருப்பதாகவும், தம்முடைய முன்னோருக்கு இது பற்றித் தெரிந்திருக்கலாம் என்றும், வேதங்களில் இதுபற்றி எழுதப்பட்டுள்ளது என்றும் சொல்லிற்று. கடல் இவைகளைச் சுற்றியே உள்ளது. அதில்தான் வாழ்ந்துகொண்டும் இருந்தன. இக்கதையை விளக்குகின்ற ஓஷோ, 'சில சமயங்களில் வெகு அருகாமையில் இருப்பதை நீங்கள் மறந்து விடலாம். மிகவும் அருகில் இருப்பதால், அதை உங்களால் பார்க்க முடியாமல் போகக் கூடும். ஏனெனில் ஒரு விஷயத்தைப் பார்ப்பதற்க்கு சற்று இடைவெளி, தூரம் தேவைப்படுகிறது. உங்களுக்கும், தெய்வீகத்திற்கும் இடையே எவ்வித இடைவெளியும் இல்லை. மீன் கடலின் அங்கமாகும். தனிப்பட்டவைகள் போன்று தோன்றினாலும் அவைகளின் உள் ஆன்மாக்கள் ஒன்றுதான்' என்கிறார். நாம் கடவுளின் அங்கமாக இருக்கிறோம்.

மனித சக்திக்கு மீறிய ஒரு பிரபஞ்ச ஆற்றலைத் தேர்ந்து தெளியும் தேடலுக்குப் பெயரே மெய்ஞானம். இறைவன் இல்லை என்று கூறும் நாத்திகர்கள் கூட, ஏதோ ஒன்றிலிருந்து இந்த பிரபஞ்சம் தோன்றியது என்பதை மறுக்க இயலாது. 'ஏதோ ஒன்று' பயங்கரமாக வெடித்து (Big Bang Theory) இந்த பிரபஞ்சம் தோன்றியது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த 'ஏதோ ஒன்று' எது? என்பது பற்றியும், அது வெடிப்பதற்கானத் தூண்டுதல் எங்கிருந்து வந்தது? என்பது பற்றியும் அவர்களால் விளக்க முடியவில்லை. அந்த 'ஏதோ ஒன்று' புரிந்துகொள்ள முடியாததாக இருப்பதால் அதை விளக்குவதில் பல வேறுபாடு இருக்கிறது. ஏனென்றால், பரம்பொருள் அறிஞர்களாலும் புரிந்துகொள்ள முடியாதது. அது அறிவியல் எல்லைக்கு அப்பாற்பட்டது. 'இயற்கையின் ஆற்றல் கடல்போல் என் கண் முன் விரிந்து கிடக்கிறது. நானோ கடற்கரையில் கூழாங்கற்களையும் கிளிஞ்சல்களையும் பொறுக்கிக் கொண்டிருக்கிறேன்' என்றார் நியூட்டன்.

ஒரு முனிவர் சொல்கிறார், 'இறைவா! நீ சுய ஒளி பெற்றவன், உன்னைத் தெரிந்துகொள்ள வேறு ஒளி தேவை இல்லை. நீயே உனக்கு சாட்சியாக இருப்பவன் (கடவுளுக்கு சாட்சி கடவுளே). உன்னை நிரூபிக்க வேறு நிரூபணம் தேவை இல்லை. இன்னும் நான் அறியாதவனாக இருக்கிறேன். என் கண்கள் மூடப்பட்டுள்ளன. நான் எல்லைக்குட்பட்டவன். என்னுடைய எல்லைக்குட்பட்ட தன்மையாலும், என்னுடைய கண்களாலும் சுய ஒளியில் பிரகாசிக்கும் உன்னைக் காண முடியவில்லை. நீ எனக்குள் எழுந்தருள வேண்டும்'. இறைவனைத் தேடுவோரின் பிராத்தனை இத்தகையதாக இருத்தல் வேண்டும்.

வசந்தம் வீசும்...

## 17 புனித வளனாரின் ஆண்டு செபம் விளக்கம்



அருள்திரு.M.**லூர்து ஜெயசீலன்**,
பங்குத்தந்தை, வடலூர்.

## எல்லா வகைத் தீமையி-ருந்தும் எம்மைப் பாதுகாத்தருளும்

புனித வளனார் இறைவனின் பார்வையில் பேறுபெற்றவர். மீட்பருடைய பொறுப்பாளராக வாழ்ந்தவர், தனது கடமையை முழுமையாக நிறைவேற்றியவர். இயேசுவுக்கு மீட்பு திட்டத்தை புரிய வைத்தவர். பேறுபெற்ற கன்னிமரியாவின் கணவராக வாழ்ந்தவர். கன்னிமரியாவுக்கு பாதுகாப்பாக செயல்பட்டு அவருடன் இணைந்து பயணித்தவர். இயேசுவையும், மரியாவையும் எந்தத் தீமையும் நெருங்காமல் பாதுகாத்தவர். இயேசுவின் உயிரை மட்டுமல்ல கன்னிமரியாவின் கற்பையும் பாதுகாத்தவர். எனவே அவரிடம், எல்லாத் தீமைகளிலிருந்தும் பாதுகாத்தருளும் என்று செபிப்பது சிறந்தது.

### நல்வாழ்வுக்காக செபித்தல்

புனித வளனார் இயேசுவின் உயிரைக் குழந்தைப் பருவத்தில் பல சூழல்களில் பாதுகாத்தவர். இறக்கும் தருவாயிலிருப்பவர்களுக்கு பாதுகாவலர். எனவே நமது உடல் நலனுக்காக செபித்தல், உயிரை பாதுகாக்க செபித்தல் இவைகளில் புனித வளனாரின் பரிந்துரைமிகவும் மேலானது. இந்த வளனார் ஆண்டினை அறிவிக்கும்போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் "இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் உலகம் முழுவதிலுமுள்ள மக்களை புனித வளனாரின் பாதுகாவலில்தான் ஒப்படைக்கின்றார்". அதைப்போல நோயுற்றவர்களை பாதுகாக்கின்ற பணிகளைச் செய்கின்ற முன்கள பணியாளர்களுக்காக செபிக்கவும் அழைப்பு கொடுக்கின்றார். நமக்கு பாதுகாப்பு கொடுக்கின்றவர் களுக்காக நாம் செபிக்க வேண்டும் என்றும் அழைப்பு கொடுக்கின்றார். நமக்காக வாழ்கின்ற நமது பெற்றோர், உடன்பிறப்புகள் மற்றும் நமது வாழ்வை மேம்படுத்த நமக்காக தமது வாழ்வை அர்பணிக்கின்ற குருக்கள், துறவியர்கள், அரசியல்வாதிகள் அனைவருக்காகவும் புனித வளனாரிடம் செபிக்க வேண்டும். நமக்கான அன்றாட பணிகளைச் செய்கின்ற சமையலர்கள், தூய்மைப் பணியாளர்கள், சலவைக்காரர்கள், விவசாயிகள், தொழிலாளிகள் அனைவருக்காகவும் செபிக்கவேண்டும்.

### ஆன்மா சார்ந்த தீமைகள்

ஆன்மா சார்ந்த தீமைகள் நமது எண்ணங்களில் இருந்து வருபவை. நமது ஆன்மாவை பாவத்தில் வீழ்த்துகின்ற எண்ணங்கள் ஆன்மா சார்ந்த தீமைக்கான அடிப்படை. புனித வளனார் இயேசுவையும், மரியாவையும் எந்த தீய எண்ணங்களும் நாடாமல் பாதுகாத்தவர். அவர்களின் ஆன்மா தூய்மையாக இறைவனையே சார்ந்து நிற்கவும், தீய எண்ணங்களை விலக்கி வாழவும் அவர்களுக்கு உதவி செய்தவர். எனவே, ஆன்மாவை தூய்மையாக வைத்துக்கொள்ள புனித வளனாரின் பரிந்துரை எப்பொழுதும் நமக்கு தேவை என்பதை உணர்ந்து அவரிடம் செபிப்போம்.

### உடல் சார்ந்த தீமைகள்

உடல் சார்ந்த தீமைகள் உடல் இச்சைகளால் வருபவை. புனித பவுலடிகளார் கலாத்தியருக்கு எழுதிய மடலில் "பரத்தமை, கெட்ட நடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம்" (கலா 5:16-19) என்ற உடல் சார்ந்த தீமைகளைப் பட்டியலிடுகிறார். இந்தத் தீமைகள் ஊனியல்பின் இச்சைகளால் வருபவை என்றும் குறிப்பிடுகிறார். எனவே இவைகளை வெற்றி கொள்ள ஊனியல்பின் இச்சைகளை வெற்றி கொண்ட புனித வளனாரின் பரிந்துரை நமக்கு மிகவும் அவசியமாகிறது. எனவே உடல் சார்ந்த தீமைகளை வென்று இறைவனின் பிள்ளைகளாக வாழ புனித வளனாரிடம் செபிப்போம்.

### தீமைகளை வெற்றி கொள்வோம்

தீமைகளை வெற்றிகொண்டு நிலைவாழ்வை பெற நமக்கு இயேசு மட்டுமே ஒரே வழி. ஆனால் அவரிடம் பரிந்துரைப்பதில் அன்னை மரியாவுக்கு அடுத்த நிலையில் புனித வளனார் சிறப்பான இடத்தைப் பெறுகிறார். புனிதர்கள் இயேசுவின் படிப்பினைகளைக் கடைபிடித்து வெற்றி பெற்றவர்கள். ஆனால் புனித வளனார் இயேசுவோடு வாழ்ந்தபோது தீமைகளை வெற்றி கொண்டவர் எனவே அவரின் பரிந்துரை மிகவும் சிறப்பானது, முக்கியத்துவம் வாய்ந்தது. அதிலும் மரியாவுக்கு அடுத்த நிலையில் புனித வளனார் இயேசுவின் மீது உரிமையுடையவர். இயேசுவிடம் பரிந்து பேசும் கடமையுடையவர். திருச்சபையின் பாதுகாவலர் என்ற முறையில் இறைமக்களை தீமையிலிருந்து பாதுகாக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டவர். எனவே தனது வல்லமையுள்ள பரிந்துரையால் திருச்சபையில் உள்ள மக்களை பாதுகாக்கும் பொறுப்புடையவர். எனவே எல்லா நிலைகளிலும் உள்ள இறைமக்கள் தங்களை தீமையிலிருந்து பாதுகாக்க புனித வளனாரிடம் செபிப்பது சிறந்தது.

### எல்லாவிதத் தீமையி-ருந்தும் எம்மைப் பாதுகாத்தருளும் என்று செபிக்கும்போது

1. திருச்சபையின் பாதுகாவலரான புனித வளனாரால் எல்லோரையும் பாதுகாக்க முடியும் என்பதை உணர்ந்து அவரிடம் செபிக்க வேண்டும்.

2. புனித வளனார் இயேசுவையும், மரியாவையும் பாதுகாத்ததைப் போல நம்மையும் எல்லாத் தீமையிலிருந்தும் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையோடு செபிக்க வேண்டும்

3. தீமையிலிருந்து மனித சமூகத்தை காப்பதில் இயேசுவுக்கு, அன்னை மரியாவுக்கு அடுத்த நிலையில் புனித வளனார் உதவுகிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

4. நமது ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைக்க நமக்கு எல்ல சூழலிலும் புனித வளனார் உதவி செய்வார் என்று நம்பி அவரிடம் செபிப்போம். அவரும் நம்மை காத்து வழிநடத்துவார்.



# சிறுதுளி

- **திரு. அல்போன்ஸ் மோசஸ்**-புதுச்சேரி-9.

அதிகாலை எழுந்து குளித்துவிட்டு உடை அணிந்து வீட்டிலிருந்து கிளம்பி பேருந்து நிலையத்தை அடைந்தான் ரமேஷ். எப்படியும் இன்று நேர்முகத் தேர்வுக்குப் போய் ஆகவேண்டும். நிலையத்தில் ஒருபேருந்தும் காணப்படவில்லை. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஆட்டோ ஓட்டுனரிடம் "கமலாபுரம் செல்ல எவ்வளவு ஆகும்" என்றான். அங்குதான் அந்த தொழிற்சாலை இருந்தது.

வண்டியைத் துடைத்துக் கொண்டே "வழக்கமா ரூ.300 தான் வாங்குவேன். முதல் சவாரி சார். சரி ரூ.250 கொடுங்க. பரவாயில்லை" என்றான் ஆட்டோ சங்கர். வண்டி வேகமாகப் பறந்தது. "அண்ணே வழியில டிபன் கடை இருந்தா நிறுத்துங்க சாப்பிட்டுவிட்டு போகலாம்" என்றான் ரமேஷ்.

இரண்டு கிலோ மீட்டர் தள்ளி ஒரு புளிய மரத்தடியில் ஒரு அம்மா கடை வைத்திருந்தார்கள். "ஐயா இந்த கடையில சாப்பிட்டா வயித்துக்கு எந்த குறையும் வராது" என்று கூறிக்கொண்டே வண்டியை நிறுத்தினான் ஆட்டோ சங்கர்.

நடுத்தர வயதுடைய பெண்மணி. அவரது தோற்றமே அவர் கணவர் துணையற்றவள் என்பதை நிருபித்தது. இருவரும் அமர்ந்து சாப்பிட்டனர். "மொத்தம் எவ்வளவுமா?" என்று கேட்ட ரமேஷிற்கு "ரூ.60 தாம்பா" என்றாள் அந்தப் பெண்மணி. ரமேஷ் நீட்டிய ரூ.100ஐ பெற்றுக் கொண்டு ''வருமானமே வரலப்பா. மீதிப் பணத்தை எப்படி கொடுக்கிறது?'' என்றாள் சற்று தயக்கமாக.

''அதனால் என்னம்மா இன்னைக்கு இல்லைன்னா நாளைக்கு வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறிக்கொண்டே ஆட்டோவில் அமர்ந்தான் ரமேஷ். வண்டி புறப்பட்டது. "சார் இந்த பணத்திற்காக நாளைக்கு வரவா போறீங்க? எப்படி நாளைக்கு வந்து வாங்கிக்கிறேன்னு சொல்லி மீதிப் பணத்தை அந்த அம்மாவிடம் விட்டுவிட்டு வர்றீங்க" என்றான் ஆட்டோ சங்கர்.

''அண்ணே நாம ஒரு பெரிய ஓட்டலில் சாப்பிடச் சென்றிருந்தால் இந்த தொகைக்கு திருப்தியாகச் சாப்பிட்டிருக்க முடியாது. அதோடு கூட டிப்ஸ் வேற. எப்படியும் ரூ.300 ஆயிருக்கும். ஆனா இங்கே அப்படியில்ல. எப்ப வாய்ப்பு கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் இப்படிபட்ட ஆட்களுக்கு உதவனும்ணே'' என்றான் ரமேஷ் புன்னகையுடன்.

கமலாபுரம் வந்த சங்கர் வண்டியை நிறுத்தினான். ரமேஷ் வண்டியிலிருந்து இறங்கி "இந்தாங்கண்ணா நாம பேசியபடியே ரூ.250'' என்று பணத்தை ஆட்டோ சங்கரிடம் நீட்டினான். அதிலிருந்து ரூ.50ஐ ரமேஷிடம் கொடுத்த சங்கர், "ஐயா இந்த பணம் உங்ககிட்ட இருந்தா நீங்க யாருக்காவது உதவி செய்வீங்க. அந்த புண்ணியம் எனக்கு வந்து சேரும்" என்றான்.

நேர்முகத் தேர்வின் முடிவு ரமேஷிற்குச் சாதகமாகவே அமைந்தது. நம்மையறியாமல் நாம் செய்யும் சிறுசிறு நற்காரியமும் மொத்தமாக திரும்ப நம்மிடமே வந்து சேரும் எனும் உண்மை ரமேஷிற்குப் புரிந்தது.

# கடற்பறவையின் அன்பு



**திரு. ஜெயராஜ் தானியேல்,**
முத்தியால்பேட்டை, புதுவை-3

அது ஓர் அழகிய கடற்கரை நகரம். கடற்கரையில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அலைகளுடன் போட்டி போட்டுக் கொண்டு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. அந்த நகரத்தின் தெற்கு மூலையிலே கடற்கரையை ஒட்டி செங்குத்தான பாறைகள் வானளாவ நின்றன. ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பெட்டிகளைக் கலைத்துவிட்டது போல் இருந்த அந்தப் பாறைகளின் பொந்துகளில் கடற்பறவைகள் முட்டையிட்டு அடைகாத்துக் கொண்டிருந்தன.

மலையேறும் பயிற்சி பெற்ற பறவையியலாளர் குழு ஒன்று அந்தப் பாறைகளில் கூடு கட்டிவாழும் கடற்பறவைகளைப் படம் பிடித்துக்கொண்டிருந்தது. குழுவின் காணொளியியல் நிபுணரான கௌதம் பின்தொடர முன்னேறிக் கொண்டிருந்தான் குழுவிலேயே இளையவனான சார்லி. புகைப்படக் கருவிகளின் 'க்ளிக்' சத்தத்தில் இருவரையும் கண்டுமிரண்ட பறவைகள் கத்திக் கொண்டே கூட்டைவிட்டுப் பறந்து வானத்தில் வட்டமிட்டன. ஆனால், இரண்டு பறவைகள் மட்டும் கொஞ்சமும் அசையாமல் கோபத்தை வெளிப்படுத்தியபடி முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருந்தன. மனிதர்களுக்கு வேண்டுமானால் பயம் ஒரு தொற்று நோயாக இருக்கலாம்!

சார்லி அந்தக் கூட்டை நோக்கி அங்குலம் அங்குலமாக முன்னேறிக் கொண்டிருந்தான். ஒரு அடி இடைவெளியில் அந்த இரண்டில் ஒருபறவை கூட்டைவிட்டு வெளியே வந்து, சிறகை விரித்துப் பறக்கத் தொடங்கியது. இப்பொழுதும் ஒரு பறவை மட்டும் அஞ்சாமல், கூட்டைவிட்டு வெளியேறாமல், தன் கடமையில் கண்ணுங்கருத்துமாக இருந்தது. சார்லி இப்பொழுது கூட்டை நெருங்கிவிட்டான். சில விரற்கடைகள் இடைவெளியில் கூட்டின் விளிம்பைத் தொட்டுவிட்டான். ஊகூம்... சுற்றிலும் அச்சம் நிலவியபோதும் அது கொஞ்சமும் அசரவில்லை. மெல்ல ஊர்ந்து சென்று அதன் சிறகுகளைத் தொட்டு வருடினான். ஆண்களுக்குள்ளும் தாய்மையின் சாயல் கொஞ்சமாவது இருக்கத்தான் செய்கிறது!

முதலில் கோபத்தை வெளிப்படுத்திய அந்தத் தாய்ப் பறவை, பிறகு சாந்தமாகி அவன் தடவிக் கொடுக்கட்டும் என்று விட்டுக் கொடுத்தது. கூட்டுக்கு அருகில் இருந்த பட்டுப் போன்ற மென்மயிர் போர்த்திய வேறொரு பறவையின் குஞ்சையும் வருடிக் கொடுத்தான். திடீரென்று, அந்தப் பறவை வெளியே கிடந்த முட்டைகளையும், அவன் தடவிக் கொண்டிருந்த வேறொரு பறவையின் குஞ்சையும் சிறகுகளால் இழுத்துதன் கூட்டுக்குள் வைத்துக் கொண்டது. எல்லா முட்டைகளின் மீதும் உடலின் வெப்பம் பரவுமாறு தன் சிறகுகளை நன்றாக விரித்து அமர்ந்துகொண்டது.

தாய்ப் பறவைதன் முட்டையை மட்டும் பேணாமல் வேறொரு பறவையின் முட்டையையும், குஞ்சையும் பாதுகாத்தது கண்டுமனம் நெகிழ்ந்த சார்லிக்கு சங்கீதக்காரன் பாடியது நினைவுக்கு வந்தது - "அவர்தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர்தம் இறக்கைகளின் கீழ் நீர் புகலிடம் காண்பீர்'' (திருப்பாடல் 91:4).

இளம் உள்ளங்களுக்கு (166)

## வெறுப்பை விதைக்காத கல்வி

– B. மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**கல்வியின் நோக்கம்:** கல்வியின் மெய்யான நோக்கம் மாணவர்களின் மனதில் அறியாமை இருளை நீக்கி, அறிவு ஒளி வீசச் செய்வதாகும். கல்வி என்பது ஒருவரை உடல், மனம், ஆன்மீக ரீதியாக வளர்ச்சியுறச் செய்வதாகும். தற்போதைய கல்விமுறை மாணவர்களிடையே போட்டி, பொறாமை, தோல்வி, பயம், வெற்றி வெறி ஆகியவற்றை வளர்ப்பதாக உள்ளது.

**குரு தந்த கல்வி:** ஓர் குருவிடம் சில மாணவர்கள் தங்கி கல்வி பயின்றார்கள், அந்த குரு தன் மாணவர்களின் அறிவு மட்டுமல்லாமல் இதயமும் வளரவேண்டும் என்று விரும்பினார். அந்த ஆண்டு அவரிடம் கல்வி பயின்ற மாணவர்களில் மூன்று பேர் கடைசி தேர்வில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் அந்த குரு அந்த மூன்று மாணவர்களுக்கும் இன்னமும் ஒரு தேர்வு எஞ்சி இருப்பதாக அடிக்கடி கூறி வந்தார். பள்ளியின் இறுதி நாளும் வந்தது. ஆனாலும் அந்த இறுதித் தேர்வு இன்னமும் நடைபெறவில்லை. அன்று மாலை மூன்று மாணவர்களும் தங்கள் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு குருவிடம் கடைசி ஆசீர் பெற்று கிளம்பினார்கள்.

**காட்டு வழி பயணம்:** போகும் வழியில் அந்த மூவரும் குரு சொன்ன கடைசி தேர்வை பற்றி சிந்தித்து கொண்டே சென்றார்கள். மாலை நேரம் மங்கிக்கொண்டு வந்தது. இருட்டுவதற்கு முன்பாக பக்கத்து கிராமத்தை சென்றடைய வேண்டும். கரடுமுரடான காட்டுபாதை வழியாக சென்று கொண்டிருந்தார்கள். இருள் கவிழத் தொடங்கியது. அந்த பகுதி வனவிலங்குகள் நிறைந்த பகுதி, அவர்களுக்கு முன்பாக முள்ளும் புதரும் மண்டிய பாதை தென்பட்டது.

**மூவரும் மூன்று விதம்:** அவர்களுள் ஒரு மாணவன் சட்டென்று முற்களைத் தாண்டி குதித்து அப்பால் சென்றுவிட்டான். இரண்டாவது மாணவன் பக்கத்தில் வளைந்து சென்ற பாதையின் வழியாக சென்று மறுபக்கத்தை அடைந்தான். மூன்றாவது மாணவன் தன் பெட்டி படுக்கைகளை இறக்கி வைத்துவிட்டு, அந்த முட்களை களைந்து ஒன்று சேர்த்து அப்புறப்படுத்தி அந்த பாதையை சீராக்கினான். அவன் சக மாணவர்கள் அவனிடம், “உனக்கு என்ன பைத்தியமா? இரவு நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாம் பக்கத்து கிராமத்திற்கு சீக்கிரமாக செல்ல வேண்டுமே. முட்களை களைவதற்கு இது நேரமல்லவே” என்றனர். ஆனால், அந்த மாணவன், பகல் நேரமாக இருந்தால் ஆபத்தில்லை. முட்கள் கண்ணுக்கு புலப்படும். ஆனால் நாம் சென்ற பிறகு இருளில் யாராவது நடக்க நேர்ந்தால் இந்த முட்கள் அவர்கள் கா–ல் குத்தி துன்பம் ஏற்படுமே. இதை உணர்ந்தும், நமக்கு பின்னால் வருபவர்களை பற்றி எவ்வித கவலையும், அக்கறையுமின்றி நாம் சென்றால், நாம் கற்ற கல்விக்கு அர்த்தமில்லையே என்றான்.

**திடீரென்று தோன்றிய குரு:** அப்போது இதுகாறும் புதரின் மறைவில் மறைந்திருந்து எல்லாவற்றையும் கவனித்து கொண்டிருந்த குரு வெளிபட்டார். அவர்தான் அந்த பாதையில் முட்களை முன்னதாகவே பரப்பியிருந்தார். அதுதான் அவர் அந்த மூவருக்கும் வைத்த கடைசி தேர்வு. குரு பேசினார்: “முட்களை அப்புறப்படுத்தாமல் மறுபுறம் தாண்டி சென்ற இரு மாணவர்களும் தேர்வில் தோற்று விட்டார்கள். அவர்கள் மீண்டும் பள்ளிக்கு திரும்ப வேண்டும். முட்களை அப்புறப்படுத்திய மூன்றாவது மாணவன் மட்டுமே கடைசி தேர்வில் வெற்றி பெற்றான்! முட்களை கண்டும் காணாதவர்களாக அவற்றை தவிர்த்து தாண்டி செல்பவர்கள், பிற்காலத்தில் பிறர் செல்லும் பாதையில் முட்களை பரப்புபவர்களாகவும் மாறலாம்! ஆனால் முட்களை அப்புறப்படுத்தி பிறர்செல்ல சரியான பாதை வகுப்பவன், பிறர் நலனில் அக்கறை உள்ளவன், அவனே உண்மையில் கற்றவன்” என்றார்.

**சிந்திக்க:** பிறர் நலனில் அக்கறை கொள்வது, அயலாருக்கும் உதவுவது, இரக்க சிந்தையுடன் செயலாற்றுவது, வெறுப்பை விதைக்காத செயல்பாடு இவையெல்லாம் மெய்யான கல்வி கற்றவருக்கு அடையாளம்.

## விண்ணக வாழ்வின்

**8-ஆம் ஆண்டு நினைவஞ்ச-** **முதலாம் ஆண்டு நினைவஞ்ச-**

மண்ணில் :21-11-1933
விண்ணில்: 29-01-2013



திரு. P. **செல்வநாதன்**
தலைமை ஆசிரியர் (ஓய்வு)



மண்ணில் :23-10-1938
விண்ணில்: 28-07-2020

திருமதி. S. **லூயிசா**

“ஆண்டவரே உமது பேரன்பிற்கேற்ப என் குரலைக் கேட்டருளும், உமது நீதியின்படி என்னுயிரைக் காத்தருளும்” - தி.பா. 119:149

எங்கள் பெற்றோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 28-07-2021 அன்று புதன்கிழமை காலை 6.00 மணிக்கு அணிலாடி திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் திருப்ப– ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் காணும் அனைவரும் இவர்களது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள்கள்,**

**மற்றும் குடும்பத்தார்**

# தமிழன் தமிழனா?



**அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,**
கியூரியா செயலர், பேராயர் இல்லம்.

"கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி" என்று தமிழரைப் பற்றி மிகப் பெருமையாக பேசுவதுண்டு. "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று மெட்டு கட்டி பாடுவதுண்டு. தமிழ் எழுத்துக்கள் ஏறக்குறைய மூன்றாம் நூற்றாண்டிலேயே உருப்பெற்றன என்றும், தமிழ்மொழி ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பழமை வாய்ந்தது என்றும் பெருமை பாராட்டுவதுமுண்டு. ஜி.யு போப், வீரமாமுனிவர், கால்டுவெல் மற்றும் கமில் சவெலாபில் போன்ற வெளிநாட்டினரைக் கூட தன்பால் தீராத காதல் கொள்ள வைத்தது தமிழ். இன்றும் தமிழ்மொழியானது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மிகப்பரவலாக பேச்சுவழக்கில் உள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் 7 கோடிக்கும் மேலான மக்கள் தமிழ் பேசுகின்றனர்.

தமிழ் மொழியில் எண்ணெற்ற கதைகள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், இதிகாசங்கள், நாவல்கள், புதினங்கள் உள்ளன. உலகப்பொதுமறை என்று போற்றப்படுகின்ற திருக்குறள் தமிழ்மொழியின் பெருமையை உலகளவில் நிலைநாட்டியிருக்கிறது. "தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!" என்ற வார்த்தைக்கேற்ப நாம் அனைவரும் தமிழ்த்தாயின் பிள்ளைகளாக இருப்பதற்காக மிகவும் பெருமைப்பட வேண்டும். தமிழ், தமிழன், தமிழச்சி, தமிழ் பண்பாடு மற்றும் தமிழ்நாடு என்று சொன்னாலே உலகளவில் நமக்கென்று ஒரு தனிப்பெயர் உள்ளது. இவை அனைத்திற்கும் காரணம் தமிழ்மொழியேயாகும்.

தமிழ் மொழி நமக்கு சிறப்பு சேர்த்திருப்பது போல நாமும் தமிழுக்கு சிறப்பு சேர்க்க வேண்டும், சேர்த்திருக்கிறோமா? சேர்ப்பதுதானே முறை!. தமிழால் உலகளவில் நமக்கு பெருமை இருப்பது போல நம்மால் தமிழ் உலகளவில் பெருமையடைய வேண்டுமல்லவா?. அதற்கு முதற்படி தமிழர்களாகிய நாம் தமிழ்மொழியை தெளிவாக, திருத்தமாக, பிழையின்றி எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், நம்மில் பலருக்கு (படித்தவர்களுக்கும்) தமிழை தெளிவாக வாசிக்கத் தெரிவது இல்லை. இது முற்றிலும் உண்மை, யாரும் மறுக்கவியலாது. அதிலும் குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினருக்கு தமிழ் பேச மட்டுமே தெரிகிறது. படிக்கவோ, எழுதவோ தெரிவது இல்லை. இதை நம்ப முடியவில்லையெனில் உங்கள் வீட்டிலோ, அல்லது அருகில் உள்ள வீட்டிலோ பள்ளி செல்லுகின்ற மாணவ மாணவியரிடம் ஒரு தமிழ் புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொல்லுங்கள். அப்போது புரிந்துகொள்ள முடியும். பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் கூட தமிழை படிப்பதற்கு திக்கித் திணறுவதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. இப்படிப் பட்ட நிலையில் நாம் எப்படி தமிழுக்கு உலகளவில் பெருமை சேர்க்கப்போகிறோம் என்று தெரியவில்லை. இளம்தலைமுறையினர் இவ்வாறு தமிழறியா தற்குறிகளாக இருப்பதற்கு பெற்றோர்களும், பெரியவர்களும் ஒரு வகையில் காரணமே. மழலை மொழி அறியுமுன்னே மாற்றான் மொழியை அறிய வேண்டும் என்று வெற்று பெருமைக்காக மழலைகளை ஆங்கில பள்ளிகளுக்கு அனுப்பி, அந்த இளம் மழலை மலர்களை கசக்குவதால் வந்த விளைவுதான் இது. நாமெல்லாம் எந்த ஆங்கில வழியில் கற்றோம், ஆனால் இன்று நாம் நலமாக வாழவில்லையா? ஆங்கிலம் இல்லையென்றால் வாழ்க்கையே இல்லை என்பதுபோல் இன்று நிலை மிக மோசமாக மாறிவிட்டது. தாய்மொழியைச் சரிவரக் கற்காமல் அயல்மொழியைக் கற்பதென்பது, பெற்றத் தாயை பராமரிக்காமல், பிறருக்கு தான தர்மம் செய்வதற்கு சமம். அதனால் எந்த புண்ணியமும் இல்லை. முதலில் பெற்றவரை அன்பு செய்வோம், பிறகு மற்றவரை அன்பு செய்யலாம்.

**... ... (தமிழன் என்று சொல்ல திராணி உண்டா??)... ...**

---



**திரு. ச.தி. தானியேல்**

**தோற்றம் : 09-07-1922**
**மறைவு : 26-07-2012**

# விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

***"இதோ, ஒரு மறை பொருளை உங்களுக்குச் சொல்லுகிறேன். நாம் யாவரும் சாக மாட்டோம்; ஆனால், அனைவரும் மாற்றுரு பெறுவோம்"***

**- (1கொரி.15:51)**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 26-07-2021 திங்கள்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, முத்தியால்பேட்டை புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் பங்குகொண்டு செபத்தை ஏறெடுக்க அழைக்கும்

**மகன்கள்-மருமகள்கள்,**
**மகள்-மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரன்கள், கொள்ளுப்பேத்திகள்.**

முத்தியால்பேட்டை, புதுவை-3.

# விண்ணக வாழ்வின் 50–ஆம் ஆண்டு நினைவு அஞ்ச–

## விண்ணில் 28-07-1971

மண்ணில் 24-05-1897





மண்ணில் 03-07-1902

**BASILE SANDANASSAMY** **ANTHONIAMMALLE BASILE**

"ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று" - சங்கீதம் 118:23

கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்ற உம் வாக்குறுதியின்படி

**BASILE SANDANASSAMY**
**ANTHONIAMMALLE BASILE**

அவர்களை வாழ வைத்து இருவரையும் ஒன்றாகவே தம்மோடு அழைத்துக்கொண்ட ஆண்டவரே உமக்கு நன்றி, தோத்திரம்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மகள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**



# பாராட்டுகிறோம்! பெருமைப்படுகிறோம்! வாழ்த்துகிறோம்!



திருமிகு Dr. A.**சேவியர் மைக்கேல் ஆனந்து** அவர்கள், புகழ்மிகு புதுவையின் பெருமைக்குரிய மருத்துவர். இவர் இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையில் பலரால் பாராட்டப்பெற்று மருத்துவ சேவை புரிந்த, நினைவில் நிற்கும் மருத்துவர் திருமிகு சூசை நாயுடு அவர்களின் கொள்ளுபேரன் ஆவார். தன்னுடைய கொள்ளுதாத்தா பணியாற்றிய அதே மருத்துவமனையில் தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர்

× நம்முடைய பேராயர்கள், குருக்கள், துறவிகள் உடல் நலத்திற்கும் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் எந்நேரமும் சேவை செய்துவருகிறார்.

× கொரோனா பெருந்தொற்று இரண்டு அலைகளின் தாக்கங்களின்போதும் புதுவை அரசின் தொடர்பு அலுவலராக சிறப்பாக பணிபுரிந்து கொண்டிருப்பவர், மேலும்

× புதுவை வாழ் பிரெஞ்சு குடியுரிமையாளருக்கு பிரெஞ்சு துணை தூதரகத்தின் அதிகாரப்பூர்வமான மருத்துவராக பணியாற்றி வருகிறார். இவரின் சேவைகளை பாராட்டி அவருக்கு பிரெஞ்சு குடியரசின் வெளியுறவு பணிகள் துறை அமைச்சகம், 14-07-2021 அன்று அரசின் உயரிய விருதுகளில் ஒன்றான **"வெளியுறவு பணிகள் பாராட்டு வெள்ளி பதக்கம்"** அளித்து சிறப்பித்திருக்கிறது.

இவரை

பெற்றோர் **ர.ஆரோக்கியநாதன் - அமலாவதி,** சகோதரி, சகோதரர்கள் மற்றும் உறவினர்களோடு சேர்ந்து மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகரும், குருக்களும், துறவியரும் மற்றும் இறைமக்களும் வாழ்த்துகின்றோம்!

மேலும் இவர் பணி சிறக்க செபிக்கின்றோம்.

## In loving memory of our Mother / Grandma / Great-Grandma's Birth Centenary Celebration

## 02-08-2021



**Mrs. Selvavady Michel**
W/o Joseph Michel
(1921 - 1999)
Happy 100th Birthday

*Dear Loving Parents / Grand Parents / Great - Grand Parents,*

*You are sweet and loving in heart, very wise, smart, and the best guiding force for all of us.*

*The words that come out of your lips were simply soft and comforting.*

*We love you, miss you both and we at present need you the most.*

*Always seeking your Blessings, please intercede for us with Mother Mary*



**Mr. Joseph Michel**
S/o Dr. Souce Naidu
(1909-1969)
Happy 112th Birthday

*With Love*

Sons, Daughters, Sons-in-law, Daughters-in-law, Grand Children, and Great - Grand Children.

*In your hands, O Lord,*
*we humbly entrust them.*
*In this life you embraced them*
*with your tender love;*
*deliver them now from every evil*
*and bid them eternal rest - Amen.*

A requiem Mass will be offered on 02-08-2021 at 06.30 A.M. at the Immaculate Conception Cathedral, Puducherry.

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.